இந்திய உச்ச நீதிமன்றம்

2002-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7-ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் உதேய் உமேஷ் லலித்

மாண்புமிகு நீதியரசர் எஸ்.ரவீந்தர பாத்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் பீலா எம்.திரிவேதி

உரிமையியல் மேல்முறையீட்டு எண்.1144/2022

(சிறப்பு அனுமதி மனு எண்.19059/2019-ல் இருந்து எழுகிறது)

R. முத்துகுமார் மற்றும் பலர் ---மேல்முறையீட்டாளர்கள்

- எதிர் -

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
விநியோக நிர்வாகம்
மற்றும் பலர் ---எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உடன்

உரிமையியல் மேல் முறையீட்டு எண்கள்.1145, 1155/2022

(சிறப்பு அனுமதி மனு எண். 15629 முதல் 15639/2019 வரையிலிருந்து எழுகிறது)

உடன்

உரிமையியல் மேல் முறையீட்டு எண்கள்.1156 முதல் 1179/2022

(சிறப்பு அனுமதி மனு எண். 22044 முதல் 22067/2019 வரையிலிருந்து எழுகிறது)

உடன்

உரிமையியல் மேல் முறையீட்டு எண்கள்.1180 முதல் 1187/2022

(சிறப்பு அனுமதி மனு எண். 22036 முதல் 22043/2019 வரையிலிருந்து எழுகிறது)

உடன்

உரிமையியல் மேல் முறையீட்டு எண்கள்.1188 முதல் 1214/2022

(சிறப்பு அனுமதி மனு எண். 3183 முதல் 3209/2020 வரையிலிருந்து எழுகிறது)

உத்தரவு

மாண்புமிகு நீதியரசர் எஸ்.ரவீந்திர பட்

1. சிறப்பு அனுமதி வழங்கப்பட்டது. வழக்கு தரப்பினர்களின் வழக்கறிஞர்களின் ஒப்புதலுடன், இந்த மேல் முறையீட்டு வழக்குகள் இறுதியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள் (பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டு விண்ணப்பதாரர்கள் என்றும் அழைக்கப்படுவர்) மேற்படி நான்கு மேல்முறையீட்டு வழக்கு தொகுப்பில் (1) 02.08.2018 தேதியிட்ட மெட்ராஸ் உயர்

---

1. SLP(C) 19059/2019; SLP(C)15629-39/2019; SLP(C)22044-67/2019 and SLP(C)22036-43/2019 – [WA No. 574/2017; WA No.s 1450/2017, 1452/2017 and 1454-1462/2017; W.P. Nos. 36656/2016, 36658/2016,36890/2016, 42792-94/2016, 39782-85/2016, 42613-14/2016, 35135-37/2016, 35926-30/2016, 35932-35/2016; WA Nos.990/2016 and WA Nos. 1696-1702/2018]-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் 02.08.2018 தேதியிட்ட பொதுவான தீர்ப்புக்கு எதிராக தொடரப்பட்டது.

நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வின் பொதுவான தீர்ப்பால் பாதிக்கப்பட்டவர்கள். மற்றொரு மேல்முறையீட்டு (2) வழக்கானது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகத்தால் மேற்படி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பால் பாதிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். அந்த மேல் முறையீட்டு வழக்கில் மேற்படி கழகமானது நீதிபேராணை எண். 81/2015-ல் 14.10.2015 தேதியிட்ட உத்தரவினால் எதிர் மனுதாரர்களை ஐடிஐ உதவியாளர்களாக நியமிக்க உத்தரவிடப்பட்டவர்கள்.

வழக்கு பொருண்மையின் சுருக்கம்:

2. இந்நீதிமன்றத்தில் ஏற்கனவே நடந்த வழக்கில்[சிறப்பு அனுமதி மனு எண் 1820/1990], ஏற்கனவே உள்ள பணியாளர்கள் மூலமும் திறம் வாய்ந்த பணியாள் மூலமும் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான சிறந்த முறைகளையும், திறமை வாய்ந்த பணியாளர்களை தேர்வு செய்யவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து பரிந்துரைக்கவும் இந்நீதிமன்ற நீதியரசர் காலஞ்சென்ற திரு. காலித் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் தனது அறிக்கையில், மற்ற சங்கதிகளுக்கிடையே, கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

---

2. SLP(C) 3183-3209/2020 இலிருந்து எழுகிறது (மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் 29.04.2019 தேதியிட்ட நீதிபேராணை மேல் முறையீட்டு வழக்கு எண்கள் Nos. 1071, 1072 of 2016, நீதிபேராணை மனு எண்கள். 8150, 10266, 10267, 17997, 17998, 29113, 29114, 29115, 29116, 33743, 33744, 33745, 39292, 39673, 41609, 41610 of 2016 மற்றம் நீதிபேராணை மனு எண்கள் 13948, 13949, 13950, 13951, 13952, 13953 of 2017 மற்றும் நீதிபேராணை மனு எண்கள் 1808, 18576, 18624 of 2018-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் 29.04.2019 தேதியிட்ட பொதுவான தீர்ப்புக்கு எதிராக தொடரப்பட்டது.

“110. மற்ற பணியாளர்களை எவ்வாறு தேர்வு செய்வது என்பதும் மற்றும் ஐடிஐ பணியாளர்களை எங்கு பணியமர்த்துவது என்பதும் அடுத்ததாக பதிலளிக்கப்படவேண்டிய கேள்வியாகும். எனது அறிக்கையின் முழுவதிலும், வாரியத்தின் முடிவுகளையும் அதன் நடவடிக்கைகளையும் மிகுதியாக பாதிப்படையாமல் எவ்வாறு இருக்கின்ற பணியாளர்களை பணியமர்த்துவதற்கான முறையை வகுப்பதே எனது பணி என்று அழுத்தம் கொடுத்து கூறியுள்ளேன். திறமை பெற்ற பணியாளர்களை முழுமையாக புறம் தள்ளிவிடவேண்டும் என்பது எனது எண்ணம் இல்லை. இத்திட்ட செயல்பாட்டில் அவர்களும் இடம் பெற வேண்டும். 7000 ஐடிஐ உதவியாளர்கள் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். மற்றவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றம் என்னை அனைத்து தரப்பினர்களையும் கட்டுப்படுத்தும் ஒரு இறுதியான முடிவை வழங்கவே பணியமர்த்தியுள்ளது. எனவே, தற்பொழுது எனக்கு முன்பு பணியிலிருக்கும் பணியாளர்களின் கோரிக்கையை மட்டுமின்றி மற்ற திறமை வாய்ந்த பணியாளர்களின் கோரிக்கைகளையும் கருத்தில் கொள்வதே நியாயமானதாகவும், நீதி வழங்குவதற்கு உகந்ததாகவும் இருக்கும். எனது ஆழ்ந்த பகுப்பாய்விற்கு பின்னர் வாரியமானது தற்பொழுது உள்ள 7000 பணியாளர்களுக்கு பணியமர்த்தும் ஆணைகளை வழங்கிய பின்னர் மற்ற பணியாளர்களையும் திறன் வாய்ந்த பணியாளர்களையும் 1:1 விகிதாசாரத்தில் பணியமர்த்தலாம் என்று நான் முடிவு செய்கிறேன். தற்பொழுது உள்ள

பணியாளர்கள் தேர்வு குழுவாலும், ஐடிஐ உதவியாளர்கள் வாரியத்தினாலும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்."

3. மேற்படி அறிக்கையில் கூறியுள்ளபடி தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகமானது தனது 12.07.2012 தேதியிட்ட உத்தரவு மூலம் 4000 ஐடிஐ உதவியாளர்கள் (பயிற்சியாளர்கள்) காலி பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக நேரடி தேர்வு மூலம் நிரப்புவதற்காக விண்ணப்பங்களை கோரியது. ஆணையருக்கும், கிண்டி வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கும், ஒயர்மேன்கள் மற்றம் மின் பணியாளர்களை 1:5 விகிதாசாரத்தில் வழங்க அறிவிப்பு அனுப்பியது. 12.07.2012 தேதியிட்ட செயல் முறை ஆணைகளில், மற்ற சங்கதிகளுக்கு இடையே, பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"அ. தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகத்தில் அதிகபடியாக உள்ள உதவியாளர் காலி பணியிடங்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் NTC/NAC(ITI) தகுதி வாய்ந்த மின் பணியாளர்கள் மற்றும் ஒயர்மேன்களை 4000 ஐடிஐ உதவியாளர்கள் (பயிற்சியாளர்கள்) நேரடியாக தேர்வு செய்யப்படுவார்கள். மாதம் ரூபாய் 3,250/- ஒருங்கிணைக்கப்பட்ட ஊதியத்துடன் கூடிய பயிற்சியை 4000 ஐடிஐ உதவியாளர்களுக்கு இரண்டு வருடங்கள் வழங்கவும் பயிற்சி முடிந்த பின்னர் அவர்கள் ரூபாய் 5,400 - 20,200 - 1,900 என்ற விகிதத்தில் ஊதியம் வரையறுக்கப்பட்டது."

"ஆ. தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகத்தில் தனது களப்பணியின் செயல்பாட்டு திறனை மேம்படுத்தவேண்டி குறைந்த கால

அளவிற்குள் அதிகப்படியான நபர்களை தேர்வு செய்ய வேண்டியிருப்பதை கருத்திற்கொண்டும் அவர்கள் அடிப்படையான பணிக்கு தேர்வு செய்யப்பட வேண்டியிருப்பதை கருத்திற்கொண்டும் அவர்களுக்கு பணிக்கான திறமை பற்றி ஆராய்வதை தவிர மற்ற நேர்முக தேர்வு அவசியமில்லை என்று வாரியம் முடிவு செய்தது. எனவே, தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகமானது வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதி வாய்ந்த பணியாளர்களின் பட்டியலை பெற்று அதற்கான நடைமுறைகளில் உள்ள விதிகளையும், வகைமுறைகளையும் பின்பற்றி தேர்வு செய்ய முடிவு செய்யப்படுகிறது."

4. தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகத்தில் ஐடிஐ உதவியாளர் காலி பணியிடங்களை நிரப்பும்பொழுது அதிலுள்ள மேல் வயது வரம்பை தளர்த்த கோரி சில நீதிபேராணை மனுக்கள் (நீதிப்பேராணை மனு எண். 24128/2012) தாக்கல் செய்யப்பட்டது. அவற்றை 01.11.2012 தேதியிட்ட பொதுவான உத்தரவினால் மெட்ராஸ் உயர் நீதிமன்றம் முடித்து வைத்துள்ளது. அதில் அந்நீதிமன்றமானது காலி பணியிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் இருந்த காரணத்தினாலும் அவற்றை உடனே நிரப்ப முயற்சி எடுத்த காரணத்தினாலும் தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகத்தின் நலன் கருதி மேல் வயது வரம்பினை தளர்த்த உத்தரவிட்டது. அதன்படி, 01.11.2012 தேதியிட்ட பொதுவான உத்தரவு மூலம் தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகமானது "ஐடிஐ வாணிக சான்று வைத்துள்ள

பணியாளர்களுக்கு மேல் வயது வரம்பினை தற்போதைய தேர்வின்போது தளர்த்த கோரியது."

5. தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகமானது தனது 04.07.2013 தேதியிட்ட உத்தரவு மூலம் அப்பொழுது நடைமுறையிலிருந்த 4000 ஐடிஐ உதவியாளர்களின் காலி பணியிடங்களை நிரப்புவதில் இருந்த மேல் வயது வரம்பை தளர்த்தியது. அதன் விளைவாக, வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதியானவர்களின் பட்டியலை பெற்று பணிக்கான உடல் தகுதியையும், மற்ற தகுதிகளையும் அடிப்படையாக கொண்டு தேர்வு நடைபெற்றது. இந்நீதிமன்றம் மற்றொரு ஆணை [03.10.1996 தேதியிட்ட C.A Nos. 5285 - 5328/1996-ல்] மூலம் ஏற்கனவே தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பயிற்சி முடித்த பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கவும், அவர்களை நேர்முக தேர்வில் மட்டும் கலந்துகொண்டு தேர்வு செய்யவும் மற்ற தேர்வர்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யவும் பணிக்கப்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பயிற்சி முடித்த பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்குவதில் எவ்வித மதிப்பெண்ணும் தேர்வின்போது வழங்கவில்லை. அதன்படி, பயிற்சி முடித்த பணியாளர்களுக்கு நேர்முக தேர்வில் கலந்து கொள்ள தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு இரண்டு நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி தீர்ப்பில் பயிற்சி முடித்த பணியாளர்கள் ஏற்கனவே அதே நிர்வாகத்தின் கீழ் பயிற்சி பெற்றுள்ள காரணத்தினால் அவர்கள் எழுத்து தேர்வில் பங்கேற்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டார்கள். எனினும், அவர்கள் கலந்துரையாடல் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும். நேர்முக தேர்வர்களும், ஏற்கனவே பயிற்சி

பெற்றவர்களும் ஒரே நிலையில் உள்ளபோது முன்னுரிமையானது செயல்படுத்தப்பட வேண்டும். விளைவாக பயிற்சி பெற்றவர்கள் இயல்பாக பணியமர்த்தப்பட உரிமை கோர இயலாது.

6. வேலை வாய்ப்பு அலுவலகம் பரிந்துரைத்த 13560 ஐடிஐ தேர்வர்களில் தகுதி வாய்ந்த தேர்வர்கள் மட்டுமே நேர்முக தேர்விற்கு அழைக்கப்பட்டார்கள். தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் தனது 04.07.2013 தேதியிட்ட செயல் முறை ஆணை மூலம் பின்வருமாறு உத்தரவிட்டுள்ளது.

> "வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதியானவர்களின் பட்டியலை பெற்று பணிக்கான உடல் தகுதியையும், மற்ற தகுதிகளையும் அடிப்படையாக கொண்டு செயல்பாட்டில் உள்ள விதிகள் மற்றம் விதிமுறைகள் படியும் தேர்வு செய்யப்படுவார்கள்."

7. நேர்முக தேர்வில் தோன்றிய விண்ணப்பதாரர்களின் கல்வி மதிப்பெண்களுக்கு 85% முக்கியத்துவமும், அவர்கள் நேர்முக தேர்வில் வெளிப்படுத்தும் திறன் அடிப்படையில் 15% முக்கியத்துவமும் அளிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டார்கள். நேர்முக தேர்வானது விண்ணப்பதாரர்களின் உடல் தகுதியை கண்டறியும் பொருட்டு கம்பம் ஏறுதலையும், மிதிவண்டி ஓட்டுதலையும் அடிப்படையாக வைத்து நடத்தப்பட்டது. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறையின் 25.02.2008 தேதியிட்ட அரசாணை எண்.18-ல் கூறப்பட்டுள்ளபடி 1:5 விகிதாசாரம் பின்பற்றப்பட்டு ஐடிஐ தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களின் பட்டியல் வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது. விண்ணப்பதாரர்கள் ஐடிஐ (NTC/NAC) தகுதி

வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று கோரப்பட்டது. ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் ஐடிஐ தகுதியுடைய தொழிலாளர்களுக்கும் இடையேயான நேரடி தேர்வு செய்யும் முறையானது நீதியரசர் காலித் ஆணையத்தின் அறிக்கையில் கூறியுள்ளபடி 1:1 விகிதாசாரத்தை பின்பற்றி நடத்தப்பட்டது. ஐடிஐ தகுதியுடைய தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகத்தில் ஒருவருட கால பயிற்சி முடித்த 1455 விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்விற்கு அழைக்கப்பட்டார்கள். 15,015 விண்ணப்பதாரர்களில் 10,728 விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்வில் கலந்து கொண்டார்கள். அவர்களின் விண்ணப்பத்தை ஐடிஐ மற்றும் தேசிய ஏற்றுமதி சான்றின் அடிப்டையில் பரிசீலனை செய்ததில் 10,357 விண்ணப்பதாரர்கள் தகுதி பெற்றவர்களாகவும், 351 விண்ணப்பதாரர்கள், புதுதில்லியில் உள்ள தேசிய தொழிற்பயிற்சி கவுன்சில் (என்.சி.வி.டி) வழங்கிய தேசிய வர்த்தகச் சான்றிதழை (என்.டி.சி) வைத்திருக்காததைத் தவிர, ஐடிஐ மின்பணியாளர் மற்றும் ஒயர்மேன் தகுதியில்லை என்ற காரணத்தினால் நிராகரிக்கப்பட்டார்கள்.

8. பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின் 27.05.2009 தேதியிட்ட அரசாணை எண்.65-ன் படி 4000 ஐடிஐ உதவியாளர்கள் (பயிற்சியாளர்கள்) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். விளைவாக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. அவர்களது தேர்வானது 85% ஐடிஐ தேசிய ஏற்றுமதி சான்றின் அடிப்படையிலும் 15% அவர்களது நேர்முக தேர்வின் மதிப்பெண் அடிப்டையிலும் செய்யப்பட்டது. அவர்களது தேர்வானது அதற்கென வகுப்பட்ட இட ஒதுக்கீட்டு விகிதாசார அடிப்டையிலும் சுழற்சி முறை அடிப்படையிலும் செய்யப்பட்டது.

மேற்படி தேர்வானது, வேலைவாய்ப்பு அலுவலகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியான விண்ணப்பதாரர்கள் மற்றும் பயிற்சி பெற்ற விண்ணப்பதாரர்களை உள்ளடக்கியதாக இருந்தது.

9. தேர்ச்சி பெறாத விண்ணப்பதாரர்கள் நீதிபேராணை மனு தொகுப்புக்கள்(3) மூலம் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தை நாடினர். தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் முதலில் நடத்தப்படமாட்டாது என்று கூறப்பட்ட நேர்முக தேர்வை நடத்தியது சட்டத்திற்கு புறம்பானது என்றும் தன்னிச்சையான செயல்பாடு என்றும் குறைகள் அவர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டது. நேர்முகத் தேர்வு மற்றும் வாய்மொழி தேர்வை அறிமுகப்படுத்தியது, விளையாட்டு தொடங்கிய பின்னர் அதன் விதிமுறைகள் மாற்றி அமைக்கப்பட்டதாக உள்ளது என்று வாதிடப்பட்டது. தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் மேற்படி மனுக்களில் நேர்முக தேர்வு நடத்தியது தன்னிச்சையான செயல்பாடு இல்லை என்று வாதிட்டது. அது மேலும் நேர்முக தேர்வானது விண்ணப்பதாரர்களின் உடல் தகுதியை அறியும் பொருட்டும் அவர்களது பணி தேவை தகுதிகளை அறியும் பொருட்டே நடத்தப்பட்டது என்று வாதிட்டது. தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகமானது 2005 முதல்

நடைபெற்ற அனைத்து தேர்வு முறைகளும் அதே நடைமுறைகளை பின்பற்றியதாக கூறியது. 14.12.2005 தேதியிட்ட Per.B.P(FB) No. 40, என்ற செயல்முறை ஆணை மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்தின் நிர்வாக கிளையின் 03.02.2009 தேதியிட்ட

---

3. நீதி பேராணை மனு எண்கள் 8829, 9125, 9126, 6319, 9923, 9927, 10589, 10598, 11785, 12003, 12004, 15512, 15636 மற்றும் 15873/2014; எஸ். விஜயகுமார் /எதிர்/ தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம்

குறிப்பாணை எண். 100459/265/G.57/G.572/2007 நேர்முக தேர்வு நடத்தவேண்டும் என்ற வழிகாட்டுதல்களின் தொடர்புடைய பகுதி பின்வருமாறு,

"3) பின்வரும் வழிகாட்டுதல்கள் நேர்முக தேர்வின்போது பின்பற்றப்படுதல் வேண்டும்,

அ. மின் பணியாளர்கள் மற்றும் ஒயர்மேன் தொடர்புடைய பணிகளில் ஐடிஐ தகுதியும் NTC/NAC சான்று தகுதியும் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

ஆ. வயதிற்கான சான்றாக மாற்று சான்றிதழ் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

இ. கம்பம் ஏறுதல் மற்றும் மிதிவண்டி ஓட்டும் திறமைகள் கண்டறியப்பட வேண்டும்.

ஈ. இருசக்கர வாகன உரிமை பெற்றவர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

உ. வேலை வாய்ப்பு அலுவலகத்தால் அளிக்கப்பட்டு ஏற்கனவே வாரியத்தில் ஒப்பந்த பணியாளர்களாக உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்."

மேற்படி மனுக்களை விசாரித்த ஒரு தனி நீதிபதி கொண்ட அமர்வானது 2005 வழிகாட்டுதல்களை தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் பின்பற்றி உள்ளதாகவும் அவை நீதியரசர் காலித் ஆணை அறிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளதாகவும், பணி தகுதியை அறியும் பொருட்டு தமிழ்நாடு மின்சார உற்பத்தி

மற்றும் விநியோக நிர்வாகத்திற்கு மேற்படி நேர்முக தேர்வை கோரும் உரிமை உள்ளதாகவும் கூறியது. மேலும், அந்த அமர்வானது விண்ணப்பதாரர்கள் விருப்பத்துடன் எழுத்து தேர்விலும், நேர்முக தேர்விலும் கலந்து கொண்டதால் அவர்கள் நேர்முக தேர்வானது தன்னிச்சையானது என்று கூறி வாதிட முடியாது என்று கூறியது. மேற்படி காரணங்கள் அடிப்படையில் ஒரு தனி நீதிபதி கொண்ட அமர்வு மேற்படி நீதி பேராணை மனுக்களை ஒரு பொதுவான தீர்ப்புரையின் மூலம்(04.12.2014 தேதியிட்ட) தள்ளுபடி செய்தது. அந்த உத்தரவை எதிர்த்து இரு நீதிபதி கொண்ட அமர்வின் முன் மேல் முறையீடு செய்யப்பட்டது. அவ்வாறு மேல் முறையீடு செய்யாத பிற விண்ணப்பதாரர்கள், பிற்காலத்தில் அதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்து அவை இரு நீதிபதி கொண்ட அமர்வினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

10. இரு நீதிபதி கொண்ட அமர்வின் முன்பு தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் அனைத்து மனுதாரர்களையும் பணி அமர்த்துவதாக விருப்பம் தெரிவித்து அதன் விளைவாக இரு தரப்பினர்களுக்கிடையே சமரச முடிவு எட்டப்பட்டது. சமரசத்தின் நிபந்தனைகள் பின்வருமாறு,

"சமரச குறிப்பாணை.

மேல்முறையீட்டாளர்கள் 2014-ஆம் ஆண்டின் 9125, 9126, 9319, 9923, 9927, 10589, 10598, 11785, 12003, 12004, 15512, 15636 மற்றும் 15873 என்ற மனுக்கள் மூலம் 4000 ஐடிஐ உதவியாளர்களை தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் தேர்வு செய்ததை எதிர்த்தும் அதன் 14.12.2005

தேதியிட்ட Per.B.P(FB) No. 40, என்ற செயல்முறை ஆணையையும் ஒரு நீதிபதி கொண்ட அமர்வினால் 04.12.2014 தேதியிட்ட உத்தரவு மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது. அதை எதிர்த்து மனுதாரர்கள் 2015ஆம் ஆண்டின் நீதிபேராணை மனு எண்கள். 81, 193, 194, 195, 196, 197, 1018, 1019, 1020, 1021, 1022, 1023 மற்றும் 1301 ஆகியவை தாக்கல் செய்யப்பட்டது. மேலும் 2014ஆம் ஆண்டின் நீதிபேராணை மனு எண்கள். 22095, 33097 மற்றும் 33098 ஆகியவையும் ஐடிஐ உதவியாளர்களை தேர்வு செய்ததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டது. அவற்றையும் மேற்படி 2014ஆம் ஆண்டின் நீதிபேராணை மனு எண். 9125 என்ற எண்ணுடன் அழைக்க பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டது. அவை வழக்கு விசாரணையின்போது ஒன்றாக அழைக்கப்படவில்லை. ஆனால் தற்போது ஒன்றாக அழைக்கப்பட்டுள்ளது."

மேற்படி முதல் நீதிபேராணை மனுவானது பலமுறை இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 02.09.2015ஆம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது உச்ச நீதிமன்ற தீர்ப்பை அடிப்படையாக கருத்தில் கொண்டு ஐடிஐ உதவியாளர்கள் நியமனத்தை எதிர்த்து நீதிபேராணை மனு தாக்கல் செய்த 84 மனுதாரர்களை ஒன்று மற்றும் இரண்டாவது எதிர்மனுதாரர்கள் நிர்வாகத்தில் ஐடிஐ உதவியாளர்களாக பணி அமர்த்தி கொள்வதாக பின்வரும் நிபந்தனைகள் அடிப்டையில் ஒப்புக்கொண்டது. அவை –

"விதிமுறைகளும் நிபந்தனைகளும்

1. எதிர்மனுதாரர் நிர்வாகமும் மேல்முறையீட்டாளர்களும் ஒருமனதாக எதிர்மனுதாரர்கள் நிர்வாகத்தில் அவர்களை ஐடிஐ உதவியாளர்களாக இந்நீதிமன்றம் வகுக்கும் கால வரையறைக்குள் பணி அமர்த்துவதாக ஒப்புக்கொள்கிறார்கள்.

2. எதிர்மனுதாரர் நிர்வாகமும் மேல்முறையீட்டாளர்களும் ஒருமனதாக எதிர்மனுதாரர்கள் அவர்களது அசல் சான்றிதழ்களை சரிபார்த்த பின்பே பணி நியமனமானது வழங்கப்படும் என்று ஒப்புக்கொள்கிறார்கள்.

3. ஆள்மாறாட்டத்தினை தவிர்க்கும் பொருட்டு மனுதாரர்கள் இந்நீதிமன்ற தீர்ப்பின் சான்றிட்ட நகலை அவர்களது வழக்கறிஞரால் சான்றிடப்பட்ட புகைப்படத்துடன் தாக்கல் செய்யவேண்டும் என்றும் அவர்கள் பணியில் அனுபவ முன்னுரிமையும் இதர பலன்களையும் கோரக்கூடாது என்று எதிர்மனுதாரர் நிர்வாகமும் மேல்முறையீட்டாளர்களும் ஒருமனதாக ஒப்புக்கொள்கிறார்கள்.

4. எதிர்மனுதாரர்கள் வேண்டுதல்படி, இந்த உத்தரவானது உரிய நேரத்தில் மனு செய்யாத நபர்களுக்கு பொருந்தாது என்றும் இந்த சமரச உடன்படிக்கையானது ஒரு வழிகாட்டு வழக்காக அமையாது என்றும் தெளிவு செய்யப்படுகிறது.

5. மேல்முறையீட்டாளர்களும் எதிர்மனுதாரர் நிர்வாகமும் அவரவர் வழக்கு செலவு தொகைகளை அவரவர் ஏற்க ஒருமனதாக ஒப்புக்கொள்கிறார்கள்.

தனக்கு முன்பு மனு செய்திருந்த மனுதாரர்களுக்கு பணி வழங்க வேண்டும் என்ற உத்தரவு மேற்படி சமாதானத்தின் அடிப்படையில் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வால் அளிக்கப்பட்டது. அந்த இரு நீதிபதிகள் கொண்ட அமர்வால்[நீ.மே.எண் 81/ 2015 மற்றும் 14.10.2015 தேதியிட்ட வழக்குகளின் தொகுப்பில்] அளிக்கப்பட்ட உத்தரவு (இனி சமாதான உத்தரவு என்று அழைக்கப்படும்) வழக்கின் பொருண்மை அடிப்படையிலும் அதிலுள்ள முரண்பாடுகளின் அடிப்படையிலும் முடிவு செய்யப்படாமல் நீதிமன்றமானது சமாதான நிபந்தனைகளை பதிவு செய்துகொண்டு தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகத்தை மனுதாரர்கள்/மேல் முறையீட்டாளர்களை பணி அமர்த்த உத்தரவிட்டது. அந்த சமாதான உத்தரவு பின்வருமாறு,

"3. வழக்கின் பொருண்மைகள், சூழ்நிலைகள் மற்றும் இரு தரப்பினர்களின் வழக்கறிஞர்கள் எடுத்துரைத்த பொருண்மைகளை கருத்தில் கொள்ளும்பொழுது நாங்கள் சமாதான நிபந்தனைகள் அடிப்படையில் உத்தரவு பிறப்பிப்பது நியாயமானதாகவும், ஏற்புடையதாகவும் இருக்குமென்று கருதுகிறோம்."

"4. இருதரப்பினர்கள் தாக்கல் செய்த சமாதான குறிப்பாணையை கருத்திற்கொண்டு அனைத்து மேல் முறையீடு மனுக்களும் சமாதான குறிப்பானை நிபந்தனைகளுக்கு உட்பட்டு முடித்து வைக்கப்படுகிறது. அந்த சமாதான குறிப்பானை இத்தீர்ப்பின் அங்கமாக கருதப்படவேண்டும் என்றும் 1

மற்றும் 2ஆம் எதிர் மனுதாரர்கள் இத்தீர்ப்பின் நகல் கிடைக்கப்பெற்ற 6 வார காலத்திற்குள் சமாதான குறிப்பானையில் கண்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய உத்தரவிடப்படுகிறார்கள். செலவு தொகை பொறுத்து உத்தரவு இல்லை.

விளைவாக இம்மனுவை சார்ந்த இதர மனுக்கள் முடித்து வைக்கப்படுகிறது."

11. மேற்படி சமாதான உத்தரவிற்கு பின்னர், பணி நியமனம் பெறாத பல விண்ணப்பதாரர்கள் மனுதாரர்களுக்கு இணையான உரிமை கோரி உயர் நீதிமன்றத்தை நாடினார்கள். ஒரு நீதிபதி கொண்ட அமர்வானது விண்ணப்பதாரர்கள் மேற்படி சமரச உத்தரவின் பலன்களை பெற இயலாது என்று கூறி அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட பல மனுக்களை தள்ளுபடி செய்தது. இருப்பினும், பல மனுக்களை ஒரு நீதிபதி கொண்ட அமர்வானது அனுமதித்து உத்தரவிட்டது. அதுவே தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வின் முன் மேல் முறையீடு செய்ய வழி வகுத்தது. அது தனது 02.08.2018 தேதியிட்ட பொதுவான உத்தரவு மற்றும் தீர்ப்பால் விண்ணப்பதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு மனுக்கள் (இங்குள்ள முதல் கூறப்பட்ட மேல் முறையீட்டு மனுக்கள்[நீ.மே. எண்கள் 574/ 2017, 990/ 2016 மற்றும் 1696-1702/2018]) தள்ளுபடி செய்யப்பட்டும், தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகத்தால் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு மனுக்கள்[நீ.மே. எண்கள் 1450-1462/ 2017] அனுமதித்தும் உத்தரவிட்டது. முதல் கூறப்பட்ட மேல் முறையீட்டு மனுக்களானது பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களால் பொதுவான உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டது. இரண்டாவது கூறப்பட்ட

மேல் முறையீட்டு மனுக்களானது தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகத்தால் முதலில் மனு செய்யாமல் பின்னிட்டு 2016, 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை அனுமதித்து அவர்களுக்கு நீதிமன்றம் பணி நியமனம் வழங்க உத்தரவிட்ட உத்தரவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு மனு ஆகும்.

பாதிக்கப்பட்ட மேல்முறையீட் டு விண்ணப்பதாரர்களின் வாதங்கள்.

12. பாதிக்கப்பட்ட மேல் முறையீட்டு விண்ணப்பதாரர்களுக்காக தோன்றிய கற்றறிந்த வழக்கறிஞர்களான திரு.கௌதம் நாராயணன் மற்றும் T.B.சிவகுமார் அவர்களும் தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் நியாமற்ற முறையிலும், பாகுபாடு காட்டும் முறையிலும் நடந்து கொண்டு சமாதான உத்தரவில் தரப்பினர்களாக இல்லாத நபர்களுக்கு பணி வழங்க மறுத்துவிட்டதாக கூறி வாதிட்டார்கள். அவர்கள் சமாதான உத்தரவு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 84 விண்ணப்பதாரர்களை காட்டிலும் பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நல்ல பணி திறமை உடையவர்கள் என்று வாதிட்டார்கள்.

13. பாதிக்கப்பட்ட மேல் முறையீட் டு விண்ணப்பதாரர்கள் தங்களுக்கும் சமாதான உத்தரவின் மூலம் பணி வழங்கப்பட்ட மனுதாரர்களுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை என்றும் வாதிட்டார்கள். அவர்கள் முன்பே நீதிமன்றத்தை அனுகினார்கள் என்பது மட்டுமே ஒரே வேறுபாடு என்றும் வாதிட்டார்கள். அவர்கள் மேலும் வழக்கு தொடர்வது மட்டுமே அறிவார்ந்த செயலின் அடித்தளம் ஆகாது என்றும் சொல்லப்போனால் தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம்

கூறுவதுபடி அது நியாயமான வேறுபாட்டை ஏற்படுத்தாது என்றும் வாதிட்டார்கள். தேர்ச்சி பெறாத விண்ணப்பதாரர்கள் போதுமான திறனை நேர்முக தேர்வின்போது வெளிக்காட்டாதபோதிலும் பணி வழங்க வேண்டும் என்று முடி செய்யப்பட்டபோது, அந்த முடிவானது நியாயமானதாகவும் சமமாகவும் அனைவருக்கும் அளிக்க வேண்டும். ஏற்கனவே நீதிமன்றத்தை அனுகிய விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் பணி வழங்குவது என்பது இந்திய அரசியல் அமைப்பு சட்டம் சரத்து 14-ஐ மீறுவது என்றும் வாதிடப்பட்டது.

14. மேலும், தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகமானது கேள்விக்கு உண்டான காலி பணியிடங்களை நீண்ட காலமாக நிரப்பவில்லை என்றும் வாதிட்டது. 1:1 விகிதாசாரத்தை பரிந்துரைத்த காலித் ஆனையமானது உரிய நேரத்தில் பணி நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற பொருள்கொண்டது என்றும் வாதிடப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள் பாதகமான சூழ்நிலையில் வைக்கப்பட்டார்கள் என்றும், சிலர் ஏற்கனவே தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் வழங்க மறுத்த மேல் வயது உச்ச வரம்பு தளர்விற்கு எதிராக இந்நீதிமன்றத்தை அனுகினார்கள் என்றும், பிறகு நீதிமன்றம் அந்த வயது தளர்வு அளித்து உத்தரவிட்டது என்றும், அதன்பிறகு தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் ஏற்கனவே பின்பற்றப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்ட நேர்முக தேர்வு முறையினை கையான்டது என்றும் கூறி வழக்கறிஞர்கள் இந்நீதிமன்றம் உத்திரபிரதேச அரசு மற்றும் பலர் எதிர் அரவிந்த் குமார் ஸ்ரீவட்ஷவா மற்றும் பலர்[(2015) 1 எஸ்.சி.சி. 347] என்ற வழக்கின் தீர்ப்பை முன் காட்டி அதில் கூறப்பட்டுள்ளபடி ஒரு பொது பணி நியமனமானது

அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் எவ்வித வேறுபாடுகளின்றி செய்யப்படுதல் வேண்டும் என்றும், அவர்கள் நீதிமன்றத்தை அனுகினாலும், அனுகாவிட்டாலும் அவர்களுக்கு ஒரே மாதிரியான பணி நியமனம் வழங்கப்பட கடமைப்பட்டவர்கள் என்றும் வாதிட்டார்கள்.

தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகத்தின் வாதங்கள்:

15. தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகத்திற்காக தோன்றிய மூத்த கற்றறிந்த வழக்கறிஞரான திரு.ஜாதிப்குப்தா அவர்கள் மேற்படி சமரச உத்தரவானது வழக்கின் முக்கிய பிரச்சனைகளின் முடிவு செய்யவில்லை என்றும், சமாதான குறிப்பானையை இரு நீதிபதிகள் கொண்ட அமர்வானது பின்பற்றி அதனை தனது உத்தரவில் உட்படுத்தியுள்ளதால் அந்த உத்தரவிற்கு எவ்வித முன் வழிகாட்டு தன்மையும் இல்லை என்றும் அது அந்த வழக்கு தரப்பினர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் நீதிமன்றத்தை அனுகாதவர்களுக்கு உத்தரவு பொருந்தாது என்றும் வாதிட்டார். அவர் மேலும் 2013ஆம் ஆண்டு நேர்முக தேர்வு நடத்தப்பட்டு இந்த மேல் முறையீட்டு மனுதாரர்கள் நிராகரிக்கப்பட்ட போதிலும் அவர்கள் சமசரச உத்தரவு வரும்வரை காத்திருந்து அதன் பிறகே இந்நீதிமன்றத்தை தாமதாகவே அனுகியுள்ளார்கள் என்றும் வாதிட்டார்.

16. மேலும், சமாதான உத்தரவானது ஒரு கற்பனையானது என்பதால் தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகமானது தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களை மட்டுமே பணியமர்த்த கடமைப்பட்டது என்றும் வாதிடப்பட்டது. ஒரு தவறான தீர்ப்பின் முடிவானது பின்வரும் வழக்குகளில் ஒரு உத்தரவிற்கு

அடிப்படையாக அமையாது. அவர் மேலும், நீதிமன்றமானது சட்டத்தின் அடிப்படையில் உரிய விதிகளை பின்பற்றிதான் நிவாரணம் வழங்க முடியும் என்றும் அழுத்தமாக கூறினார். இந்த வழக்கில் சமரச உத்தரவானது எந்த சட்டத்தின் அடிப்படையிலும், விதிகள் அடிப்படையிலும் செய்யப்பட்டதில்லை என்றும், அது வெறும் சலுகையின் அடிப்படையில் செய்யப்பட்டது. அதற்கு எந்த முன் வழிகாட்டு தகுதியும் இல்லை. மேலும் திரு. குப்தா அவர்கள் சமாதான உத்தரவானது சட்டத்தின் அடிப்படையாக பிறப்பிக்கப்படவில்லை என்றும் அது எந்த சட்ட அடிப்படையும் அற்றது என்றும் அழுத்தத்துடன் தெரிவித்தார். எனவே சமாதான உத்தரவை அடிப்படையாக கொண்ட மேல் முறையீட்டாளர்களின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது நியாயமான ஒன்றாகும்.

17. வழக்கறிஞர் மேலும், சமாதான உத்தரவானது நியாயமான காரணங்களை அடிப்படையாக கொண்டு பிறப்பிக்கப்படவில்லை என்றும் நீதிமன்றம் சுதந்திரமாக பரிசீலனை செய்யவில்லை என்றும் நிரூபிக்காத வரையில் அந்த சமாதான உத்தரவின் பேரில் ஒரு பொது பணி நியமனம் செய்பவரை அதே பரிகாரத்தை மற்றவர்களுக்கும் வழங்குமாறு வற்புறுத்த இயலாது என்றும் வாதிட்டார். மேலும், அவர் ஒரு தவறான உத்தரவின் பேரில் செய்யப்பட்ட தவறான செயலை அடிப்படையாக கொண்டு சட்டத்திற்கு முரணான ஒரு செயலை செய்யுமாறு வற்புறுத்த இயலாது என்று இந்நீதிமன்றமானது எண்ணற்ற வழக்குகளில் தீர்ப்பளித்துள்ளதாக வாதிட்டார். இங்கு சமமாக பாவிக்கப்படுவதற்கும் எதிர்மறையாக சமமாக நடத்துவதற்கும் இடமில்லை.

பரிசீலனை மற்றும் முடிவுரை:

18. வழக்கின் பொருண்மைகளானது, வெளியிடப்பட்ட காலி பணியிடங்கள் பற்றிய விளம்பரமும், தகுதியுடைய விண்ணப்பதாரர்களை உதவியாளர் மற்றும் பயிற்சியாளர் பணிக்கு அழைத்தது என்பதும் 2012 ஆம் வருடம் செய்யப்பட்டதாகும். முதல் சுற்று வழக்குகளானது தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகமானது மேல் வயது வரம்பை தளர்த்த நிராகரித்தது தவறானது என்று கூறி செய்யப்பட்டவை. அந்த கோரிக்கையானது ஏற்கப்பட்டு, உயர் நீதிமன்றமானது வயது வரம்பை தளர்த்த கோரிய உத்தரவை தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் முதலில் பின்பற்றியது. பணி நியமன செயல்பாடுகள் தொடங்கியபோது தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் நேர்முக தேர்வு நடத்தப்படும் என்றும் அதற்கு 15% முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் தெளிவுபடுத்தியது. இந்த மேல் முறையீட்டாளர்களை உள்ளடக்கிய பல விண்ணப்பதாரர்கள் அதற்கு விண்ணப்பித்து பங்கேற்றார்கள். கல்வி மதிப்பெண்களையும் நேர்முக தேர்வு மதிப்பெண்களையும் கூட்டாக கணக்கிட்டு தேர்ச்சி பெற்றவர்கள் பணியமர்த்தப்பட்டார்கள். இப்பொழுது, முதன் முறையாக சில வெற்றி பெறாத விண்ணப்பதாரர்கள் உயர் நீதிமன்றத்தை நாடினார்கள். அவர்களது மனுக்களை ஒரு நீதிபதி கொண்ட அமர்வு தள்ளுபடி செய்தது. விண்ணப்பதாரர்கள் மேல் முறையீடு செய்தார்கள். அவ்வாறு செய்யாதவர்கள் பின்னிட்டு 2015 ஆம் வருடமும் செய்தார்கள். இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு தனது 14.10.2015 ஆம் தேதியிட்ட சமாதான உத்தரவானது தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகத்திற்கும்

பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட சமாதான நிபந்தனைகளை அடிப்படையாக கொண்டு 84 நபர்களை பணியமர்த்த செய்யப்பட்டதாகும். அந்த சமாதான உத்தரவானது வழக்கின் சாதக பாதகங்களை சார்ந்ததாகவும் இல்லை, அது வழக்கின் அனைத்து பொருண்மைகளையும் தன்னிச்சையாக பரிசீலனை செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவும் இல்லை.

19. தற்பொழுது வழக்கு தாக்கல் செய்துள்ள பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களும் மற்றவர்களும் ஒரே நிலையில் உள்ளவர்கள் என்று வாதிட்டு சமாதான உத்தரவின் பரிகாரத்தை கோருகிறார்கள். அவர்கள் 2016ஆம் ஆண்டு முதல் உயர் நீதிமன்றத்தை நாடினார்கள். அவர்கள் தங்களுக்கு அதே போன்ற பரிகாரத்தை அளிக்க வேண்டும் என்று கோரப்பட்ட மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட்டு அவர்கள் தற்பொழுது இந்நீதிமன்றத்தின் முன் வந்துள்ளார்கள். மற்ற மனுக்களானது வெற்றிபெற்ற விண்ணப்பதாரர்கள் மூலம் செய்யப்பட்டு அவை உயர் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டதால் அதனை எதிர்த்து தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் தற்பொழுது இந்நீதிமன்றத்தின் முன் மேல் முறையீடு செய்துள்ளது.

20. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது இரு நீதிபதிகள் கொண்ட அமர்வானது இரு தரப்பினர்களின் சமாதான குறிப்பானையை ஏற்று அதன் அடிப்படையில் சமாதான உத்தரவு பிறப்பித்துள்ளது என்று தெளிவாக தெரிகிறது. நீதிமன்றம் அதன் உத்தரவில் எந்த பரிசீலனை பற்றியும் வெளிப்படுத்தவும் இல்லை, வழக்கின் சாதக பாதகங்கள் பற்றி பரிசீலனை செய்யவும் இல்லை, சமாதான குறிப்பானை எவ்வாறு நியாயமானது என்று விளக்கவும் இல்லை. வழக்கு நடவடிக்கைகளில் ஒரு

விஷயத்தை ஏற்றுக்கொள்வது என்பதும் அதனை அப்போதிலிருந்து பின்பற்றுதல் என்பதும் ஒரு பொது பணி நியமனம் செய்யும் நிறுவனத்தின் ஒரு செயல் ஆகும். ஆனால் அது நிலைக்கத்தக்கதல்ல. நியாயம் என்பது பொது அதிகார அமைப்புகளை ஒரு எடுத்துகாட்டு பணி அமர்த்துபவர்களாக இருக்கவேண்டும் என்றும், அவர்கள் ஏற்கத்தகாத கோரிக்கைகளை ஏற்கக்கூடாது என்றும் கூறுகிறது. அவ்வாறான வழக்குகளில் ஒரு சட்டத்தின் அடிப்படையிலும் அந்த சட்ட விதிகளின் உண்மையான பொருள்கொண்டு தரப்படும் சலுகைகள் மட்டுமே நிலைக்கத்தக்கதாகும். இருந்தபோதிலும், ஒரு நீதிபதி கொண்ட அமர்வின் முன் வெற்றி பெற்ற ஒரு பொது பணி நியமனம் செய்யும் அமைப்பானது நியாயமான காரணங்களின்றி மேல் முறையீட்டில் சமாதானத்தை ஒப்புக்கொண்டுள்ளது. அவ்வாறு ஏற்றுக்கொண்ட செயலானது நீதிமன்றத்தின் முன் இருப்பவர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதும், அவ்வாறு இல்லாதவர்களுக்கு (அவர்களில் சிலர் அதிகப்படியான மற்றும் சட்டப்படியான வழிகளில் பணி நியமனம் கோருபவர்களாகவும் இருக்கலாம்) தீங்கு மற்றும் கேடான விளைவுகளை விளைவிக்கும் செயலாகும். அவ்வாறான வழக்குகளில் சமாதானம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது மட்டுமின்றி அது சட்டத்திற்கும் பொது நலனிற்கும் எதிரானது.

21. இந்நீதிமன்றம் பல ஆண்டுகளுக்கு முன்னர் C.சன்ன வசவையய்யா எதிர் மைசூர் அரசு[1965 (1) எஸ்.சி.ஆர். 360] என்ற வழக்கில் கிட்டதட்ட இதேபோன்ற சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளது. அந்த வழக்கில் மாநில அரசானது சமாதானத்தின் அடிப்படையில் 16 நபர்களுக்கு பணி நியமனம் வழங்கியது நியாயமற்றது என்று மற்ற

பணிநியமனம் பெறாதவர்களால் குற்றம் சாட்டப்பட்டது. அவ்வழக்கில் இந்நீதிமன்றமானது பின்வருமாறு கோரியுள்ளது.

"1. 1959செப்டம்பர் 26 தேதியிட்ட ஒரு விளம்பரத்தின் மூலம் மைசூர் அரசு பணியாளர் தேர்வாணையமானது நிர்வாக முறை பணிகளுக்கு ஒன்றாம் மற்றும் இரண்டாம் வகுப்பு பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்யப்படும் என்று விளம்பரம் செய்யப்பட்டது. அதில் மேல் முறையீட்டாளர்கள் உட்பட பல நபர்கள் விண்ணப்பதாரர்கள் ஆவார்கள். பின்னிட்டு 1960 செப்டம்பர் 05 ஆம் தேதி அரசு பணியாளர் தேர்வாணையமானது தனது முந்தைய பணி விளம்பரத்தை மாற்றம் செய்து தேர்வு நடத்துவதற்கு பதிலான பணி நியமனமானது முழுவதுமாக நேர்முக தேர்வின் முடிவை பொறுத்து அமையும் என்று கூறியது. அந்த மாற்றமானது 1957 மைசூர் நிர்வாக பணிகள் நியமன விதிகளுக்கு எதிரானது என்று எதிர்க்கப்பட்டது. ஆனால் வழக்கு நடவடிக்கையின்போது அந்த எதிர்ப்பானது அதற்கு பின்னர் நடந்த சம்பவங்களால் கைவிடப்பட்டது.

2. பொதுப்பணி தேர்வாணையமானது நேர்முக தேர்வுகளை நடத்தி 1961ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் தேதி 98 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக கூறி பட்டியலை வெளியிட்டது. அவ்வாறு அந்த பட்டியலை வெளியிட்ட பின்பு மாநில அரசானது மேலும் 24 விண்ணப்பதாரர்களை பரிசீலனை செய்யும்படி ஒரு பட்டியலை அனுப்பிவைத்து அவர்களும் 1962 மார்ச் 07ஆம் தேதி நியமிக்கப்பட்டார்கள். அவ்வாறு ஆணையம் ஒப்புதல் வழங்க மைசூர்

பொதுப்பணி ஆணையம் (செயல்பாட்டு) விதிகள் 1957-லிருந்து அதிகாரம் பெற்றதாக கூறப்பட்டது. தேர்ச்சி செய்யப்படாத 16 விண்ணப்பதாரர்கள் இந்திய அரசியலமைப்பு சட்டம் சரத்து 14, 15 மற்றும் 16-ன் அடிப்படையில் மைசூர் உயர் நீதிமன்றத்தின் முன்பு வழக்கு தொடர்ந்தார்கள். 1962 நவம்பர் 26 ஆம் தேதி ஒரு சமாதானம் எட்டப்பட்டு அரசானது உயர் நீதிமன்றத்தை நாடியிருந்த நபர்களை நியமிக்க ஒப்புக்கொண்டது. நேர்முக தேர்வில் கலந்து கொண்ட 13 விண்ணப்பதாரர்களில் 3 விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படாதவர்கள். இவ்வாறாக மூன்று வகைகளில் பணி நியமனம் செய்யப்பட்டது. முதலாவதாக 98 விண்ணப்பதாரர்களும், இரண்டாவதாக 24 விண்ணப்பதாரர்களும், மூன்றாவதாக 16 விண்ணப்பதாரர்களும் பணி நியமனம் வழங்கப்பட்டார்கள். மொத்தமாக 1777 விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்விற்கு அழைக்கப்பட்டார்கள். பெரும்பாலான விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படவில்லை. மைசூர் உயர் நீதிமன்றம் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படாத மூன்று மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவில் ஆணையத்திடம் அவர்களையும் நேர்முக தேர்விற்கு அழைக்குமாறு கூறியதால் ஆணையமும் அந்த மூன்று மனுதாரர்களையும் சேர்த்து அவர்களோடு ஒரே தகுதியுடைய 203 விண்ணப்பதாரர்களையும் நேர்முக தேர்விற்கு அழைத்தது. முதலாவதாக நடைபெற்ற நேர்முக தேர்வில் 88 விண்ணப்பதாரர்களும், இரண்டாவதாக நடைபெற்ற நேர்முக தேர்வில் 10 விண்ணப்பதாரர்களையும் தேர்ச்சி செய்ததன் மூலம் மொத்தமாக 98 நபர்கள் தேர்ச்சி செய்யப்பட்டார்கள்.

3. உயர் நீதிமன்றத்தை அனுகிய நபர்கள் பெற்ற பணி நியமனத்தால் ஈர்க்கப்பட்ட மற்ற பணி நியமனம் பெறாத விண்ணப்பதாரர்கள் அரசியலமைப்பு சட்டம் சரத்து 14, 15மற்றும் 16 ன் கீழ் உயர் நீதிமன்றத்தில் மனு செய்தார்கள். அவற்றை உயர் நீதிமன்றம் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

********** ********** **********

9. முதல் 16 விண்ணப்பதாரர்களின் நியமனத்தை பார்க்கும்பொழுது அவர்களில் பலர் தேர்ச்சி பெறாத விண்ணப்பதாரர்களை காட்டிலும் குறைவான மதிப்பெண்களை பெற்றிருப்பதால் அவர்களது பணி நியமனத்தை நிலைக்க செய்யமுடியாததாக எங்களுக்கு தெரிகிறது. நேர்முக தேர்விலேயே பங்கேற்காத மூன்று நபர்கள் மனுதாரர்களாக உள்ள நிலையிலும், தேர்ச்சி பெறாத மற்ற விண்ணப்பதாரர்களுடன் தேர்ச்சி பெற்ற 13 விண்ணப்பதாரர்களை ஒப்பீடு செய்ய உயர் நீதிமன்றத்தின் முன் எந்தவொரு சான்றும் இல்லாத நிலையிலும் அவ்வாறான சமரச மனுவை அனுமதித்து உத்தரவிட்டது தெளிவாக தெரியக்கூடிய தவறாகும். அதில் வேண்டியவர்களுக்கு மட்டும் பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்தது. அதில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் தேர்ச்சி பெறாத விண்ணப்பதாரர்களை விட அதிக மதிப்பெண்கள் பெறவில்லை என்பதும் தெரியவந்தது. அவ்வாறாக வழக்கு இருக்கும் நிலையில் நீதிமன்றமானது பொறுமையாக செயல்பட்டு சமரசத்தை ஏற்பதால்

மற்ற நபர்கள் பாதிக்கப்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டால் ஒழிய அவர்களது சமரசத்தை ஏற்கக்கூடாது. நீதிமன்றமானது வேறு வழிகளில் செயல்படுவதன் மூலம் எதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடினார்களோ அதனை காட்டிலும் அதிகப்படியான தீங்கை நீதிமன்றம் இழைக்கிறது. எங்களின் கருத்துப்படி இந்த 16 விண்ணப்பதாரர்களின் நியமனங்கள் ஏற்க முடியாது என்றும், மனுதாரர்கள் அவர்களது மதிப்பெண்களை தேர்ச்சி பெற்றவர்களுடன் ஒப்பீடு செய்ய உரிமையுடையவர்கள் என்றும், அவர்களது தேர்ச்சியானது முழுமையாக நியாயமான காரணங்களை பொறுத்து மட்டுமே அமைய வேண்டும் என்று கருதுகிறோம். இதற்காக நேர்முக தேர்விற்கு அழைக்கப்படாத மூன்று விண்ணப்பதாரர்கள் அழைக்கப்பட்டு அவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லையென்றால் அவர்கள் பொருட்படுத்தப்பட்டிருக்கமாட்டார்கள்."

அலகாபாத் நகராட்சி மற்றும் பலர் எதிர் ராஜிவ்பாய் சோமாபாய் பார்வாத் மற்றும் பலர்[2015 (7) எஸ்.சி.சி. 663] என்ற சமீபத்திய வழக்கில் ஒரு அரசானது சமாதானத்தில் ஈடுபட்டு அதன் பணியாளரை மீண்டும் பணியில் அமர்த்த முடியுமா என்ற கேள்வி எழுந்தது. அதில் இந்நீதிமன்றம் சமாதானம் சட்டத்திற்கு எதிரானது என்று தீர்ப்பு வழங்கியது.

"17.நாங்கள் அதைப்பற்றி இங்கு குறிப்பிடுவதற்கான காரணம் என்னவென்றால் பாராளுமன்றமானது அரசியல் அமைப்பு சட்ட திருத்தத்தின் மூலம் மாநில சட்டத்துறையை அரசியல் அமைப்பு சட்டத்தின் பாகம் 9க்கு

உட்பட்டு சட்டம் இயற்ற வேண்டும் என்று வற்புறுத்துகிறது. பஞ்சாயத்துக்கள் ஒரு அரசின் நிறுவனமாக செயல்படுவதற்கு அவற்றிற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் வழங்குவதற்கு மாநில அரசுகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. ஒரு முறை பொறுப்பானது வழங்கப்பட்டுவிட்டால் அது நல்ல விவகாரங்களுக்காக செயல்படுத்தப்பட வேண்டும். இவ்வழக்கில் நாங்கள் புரிந்துகொண்ட வரையில் சர்பஞ்ச் ஆனவர் ஒரு சமாதானத்தில் ஈடுபட்டதன் மூலம் அவர் சட்டத்திற்கு புறம்பாக மட்டும் செயல்படவில்லை ஆனால் அவருக்கு அளிக்கப்பட்ட பொறுப்பிற்கு எதிராகவும் செயல்பட்டுள்ளார்.

18. இந்நிலையில் ஒரு முக்கிய விஷயத்தை பொறுத்து நாங்கள் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. தொழிலாளர் நீதிமன்றமானது ஒரு ஒற்றை வரியில் சமாதானத்தை ஏற்றுக்கொண்டு அது சர்பஞ்ச் ஆனவர் அவ்வாறு சமாதானத்தில் ஈடுபடுவதற்கு எந்த வித தீர்மானத்தின் மூலமாக அதிகாரம் பெற்றவரா என்று ஆராய எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. சர்பஞ்ச் ஆனவர் ஒரு பணியாளரை நியமிக்க அதிகாரம் உடையவர் அல்ல என்பதை அவர் மனதில் கொள்ள வேண்டும். தொழிலாளர் நீதிமன்றம் அந்தளவிற்கான பரிசீலனையை செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதென்பது ஒரு தொழிலாளர் நீதிமன்ற நீதிபதியின் கடமை என்று கூறினால் அது மிகையாகாது. அதனை நாங்கள் எவ்வித தயக்கமுமின்றி கூறுகிறோம். ஒரு நீதிமன்றமானது வழக்கில் எட்டப்படும் சமாதானமானது நியாயமானது

என்பதை பரிசீலனை செய்யும் மிக உயரிய கடைமையை உடையது. நீதிபதி ஆனவர் ஒரு சட்ட ரீதியான சமாதானம் எட்டப்படுகிறது என்று திருப்தியடைய வேண்டும்.

19. மேற்கூரிய பரிசீலனைகள் படி நாங்கள் இந்த மேல் முறையீட்டை அனுமதிப்பதன் மூலம் ஒரு நீதிபதி கொண்ட அமர்வினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவையும், தொழிலாளர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையும் தள்ளுபடி செய்து புதிதாக பரிசீலனை செய்து முடிவு வழங்க வழக்கினை மீண்டும் தொழிலாளர் நீதிமன்றத்திற்கே அனுப்பி வைக்கிறோம்."

22. மேல் முறையீட்டாளரின் வாதத்தில் அச்சானியாக இருப்பது அவர் எடுத்துக்காட்டாக காட்டி வாதிட்ட அரவிந்த்குமார் ஸ்ரீவட்சவா வழக்கே ஆகும். அவ்வழக்கில் இந்நீதிமன்றமானது பல வழக்கு தீர்ப்புகளை ஆராய்ந்து எந்த விதமான வழக்குகளில் ஒரு சமாதானத்தின் அடிப்படையாக கொண்டு வழங்கப்பட்ட தீர்ப்புகளை பின்பற்றுதல் வழக்காக கருதவேண்டும் என்று சுருக்கமாக பின்வருமாறு கூறியுள்ளது.

"23. மேல் முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் சுட்டிக்காட்டிய வழக்குகளிலிருந்து எட்டப்படும் சட்ட நெறிமுறைகளை பின்வருமாறு வகுத்து கூறப்படுகிறது.

1. பொதுவாக நீதிமன்றமானது ஒரு குறிப்பிட்ட தொழிலாளர் குழுவிற்கு ஒரு பரிகாரத்தை வழங்கும்போது அந்த தொழிலாளர்களுக்கு சமமாக இருக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் அதே பரிகாரத்தை வழங்க வேண்டும் என்ற

அவசியம் ஆகும். அவ்வாறு வழங்காவிட்டால் அது பாகுபாடு காண்பிப்பதும் அரசியலமைப்பு சட்டத்தின் சரத்து 14-ஐ மீறுவது ஆகும். இந்த நீதிமன்றமானது பல வழக்குகளில் தீர்ப்புகள் மூலம் பல காலகட்டங்களில் ஒரே நிலையில் உடைய நபர்கள் ஒரே மாதிரியாக நடத்தப்பட வேண்டும் என்ற நெறிமுறையானது பணி நியமனம் தொடர்புடைய வழக்குகளில் உணர்வு பூர்வமாக பின்பற்றப்பட வேண்டும் என்று கூறி பணியாளர் நியமன சட்டம் வளரச்சி அடைந்துள்ளது. எனவே, சில நபர்கள் நீதிமன்றத்தை நாடவில்லை என்பதற்காகவே அவர்களை வேறுபாடோடு நடத்தக்கூடாது என்பதே பொதுவான விதியாகும்.

2. இருந்தபோதிலும் இந்த நெறிமுறையானது காலவரையறை மற்றும் காலதாமதத்திற்கான சில அங்கீகரிக்கப்பட்ட விதி விலக்குகளுக்கு உட்பட்டதாகும். ஒரு தவறான முடிவினால் வழக்கில் பாதிக்கப்பட்ட நபரானவர் அதனை எதிர்த்து மேல் முறையீடு செய்யாமல் இருந்துவிட்டு அதை வேண்டா வெறுப்பாக ஏற்றுக்கொண்ட பிறகு தன்னை போன்ற நபர்கள் நீதிமன்றத்தை நாடி பரிகாரம் பெற்ற நீண்ட காலத்திற்கு பின்பு அதே பரிகாரத்தை அவ்வாறு தவறான முடிவினால் பாதிக்கப்பட்ட நபர் காலதாமதமாக கோர முடியாது. அவர்கள் வழக்கில் பங்கேற்காத நபர்கள் என்றும், தாமதமானவர்கள் என்றும், அவர்கள் வேண்டா வெறுப்பாக முடிவை ஏற்றுக்கொண்டவர்கள் என்று கருதியே அவர்கள் கோரிய பரிகாரத்தை வழங்காமல் தள்ளுபடி செய்யலாம்.

3. ஆனால், இந்த விதிவிலக்கானது ஒரே நிலையில் உடைய அனைத்து நபர்களுக்கும் பரிகாரம் வழங்க வேண்டும் என்று அளிக்கப்பட்ட நீதிமன்ற தீர்பிற்கு பொறுந்தாது. அந்த தீர்ப்பானது வழங்கப்பட்ட பரிகாரத்தை அதே நிலையில் உள்ள அனைத்து நபர்களுக்கும் வழங்க அதிகாரம் பெற்ற அமைப்புகளுக்கு கடமையை ஏற்படுத்துகிறது. அவ்வாறான சூழ்நிலையானது ஒரு தீர்ப்பு பணி ஒழுங்குபடுத்துதல் போன்ற கொள்கை ரீதியான முடிவுகளை பொறுத்து வழங்கப்படும்போது ஏற்படும். ஒரு நீதிமன்றம் தனது தீர்ப்பின் மூலம் வழங்கப்பட்ட பரிகாரமானது தன்முன் வழக்கு தொடுத்திருக்கும் நபர்களுக்கு மட்டும் பொறுந்தும் என்று வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ கூறியிருக்கும் பட்சத்தில், அதே தீர்ப்பின் அடிப்படையில் பரிகாரம் கோரும் நபரானவர் தான் காலதாமதமாக வரவில்லை என்பதை நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்."

வழக்கின் தீர்ப்பை ஆராய்வதற்கு முன்னர் அந்த தீர்ப்புக்கு வழிவகுத்த வழக்கு சங்கதிகளை பின்வரும்போது எடுத்துக்கூறுவது பயனுடையதாக இருக்கும்.

"9. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய கேள்வி என்னவென்றால் தீர்ப்பாயம் வழங்கி உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட தீர்ப்பின் பலன்களை தீர்பாயமும் உயர் நீதிமன்றமும் மற்ற நபர்களுக்கு வழங்கியது சரியா என்பதேயாகும். எதிர்மனுதாரர்கள் எதுவும் செய்யாமல் இருந்துவிட்டு காலதாமதமாக நீதிமன்றத்தை அனுகியுள்ளதால் அவர்கள் தீர்ப்பின் பரிகாரத்தை கோர இயலாது என்று மேல்முறையீட்டாளர்கள் தரப்பில்

வாதிடப்பட்டது. அவர்கள் மேலும், எதிர்மனுதாரர்களின் வழக்கு சங்கதிகள் ஜூன் 22 1987ஆம் தேதி வழங்கப்பட்டு அதை அந்நேரத்தில் அனுகிய விண்ணப்பதாரர்களுக்கு பரிகாரம் வழங்கிய தீர்ப்பாயத்தின் தீர்ப்பு தொடர்புடைய வழக்கு சங்கதிகளிலிருந்து வேறுபட்டது என்று கூறி பல சங்கதிகளை விலக்கினார்கள்."

23. எனவே, மேற்சொன்ன அரவிந்த்குமார் ஸ்ரீவட்சவா வழக்கில் தீர்பாயம் மற்றும் நீதிமன்றத்தின் உத்தரவானது வழக்கின் சாதக பாதகங்களை ஆராய்ந்து பிறப்பிக்கப்பட்டது என்றும் அது சலுகையினாலும் சமாதானத்தின் அடிப்படையிலும் பிறப்பிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. அவ்வாறான காரணங்கள் அடிப்படையில் ஒரே நிலையில் உடைய மற்ற நபர்களுக்கு பரிகாரம் வழங்க மறுத்தது நியாமற்றது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. முக்கியமாக முன் தீர்ப்பில் வழங்கப்பட்ட பரிகாரம் வேண்டி பின்னால் வழக்கு தொடுக்கும் நபர்கள் தாமதமாக நீதிமன்றத்தை நாடியிருக்க கூடாது என்ற விதிவிலக்கை இவ்வழக்கில் எடுத்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும். இவ்வழக்கில் சமாதான உத்தரவினை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்படவில்லை. அது அனைத்து நபர்களுக்கும் பொறுந்தும் என்று கற்பனையாக கூறிவிடமுடியாது. மேலும், பாதிக்கப்பட்ட மேல் முறையீட்டாளர்களும் போட்டியில் கலந்து கொண்ட விண்ணப்பதாரர்களும் (தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் வினியோக நிர்வாக வழக்கின் மேல் முறையீட்டாளர்கள்) உரிய நேரத்தில் நீதிமன்றத்தை அனுகவில்லை. அவர்கள் சமாதான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னரே விளித்துக்கொண்டு அதே பரிகாரத்தை கோரி நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல்

செய்துள்ளார்கள். எனவே, அவர்கள் சமாதான உத்தரவு பரிகாரங்களை கோர முடியாது என்பது தெளிவாக தெரியவருகிறது.

24. எதிர்மறை சமநிலை இல்லை என்பதே இந்நாட்டின் அரசியலமைப்பு புராணத்தில் கேள்விக்குள்ளாகாத கொள்கையாகும். வேறு வழியில் கூறவேண்டுமென்றால் ஒரு நபருக்கோ அல்லது ஒரு குழுவான நபர்களுக்கோ ஒரு முன்னுரிமை அல்லது பலனை சட்டத்தின் அடிப்படையாக வழங்கப்படாத பட்சத்தில் அந்த பலன் பெருகாது. அது சமஉரிமை கொள்கையாகவும் அமையாது. பசவராஜ் மற்றும் ஒருவர் எதிர் சிறப்பு நில கைப்படுத்தும் அலுவலர்[(2013) 14 எஸ்.சி.சி. 81] என்ற வழக்கில் இந்நீதிமன்றமானது பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளது.

> "8. அரசிலமைப்பு சட்டத்தின் சரத்து 14 என்பது முன்னால் வழங்கப்பட்ட தவறான தீர்ப்புகளின் அடிப்படையில் கூட ஒரு சட்டத்திற்கு எதிரான அல்லது ஏமாற்றுதலை ஊக்குவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதல்ல என்பது பலமுறை முடிவு செய்யப்பட்ட ஒரு தத்துவம் ஆகும். அந்த சரத்தில் எதிர்மறை சமநிலை இல்லை ஆனால் நேர்மறை உண்டு. எனவே, ஒருவேளை ஒரே நிலையில் உள்ள நபர்களுக்கு ஒரு தீர்வோ நிவாரணமோ தவறுதலாகவோ அறியாமலோ வழங்கப்பட்டால் அவ்வாறு வழங்கும் உத்தரவானது மற்ற நபர்களுக்கு அதே நிவாரணத்தையும் தீர்வையும் தராது. முன் வழக்கில் ஒரு தவறை இழைக்கப்பட்டால், அது பின்வரும் வழக்குகளில் நிரந்தரமாக்க இயலாது."

வேறு வழக்குகளிலும் மேற்படி தத்துவங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது (காண்க:- சண்டிகர் நிர்வாகம் எதிர் ஜக்ஜித்சிங்[(1995) 1 எஸ்.சி.சி. 745], ஆனந்த்பட்டனஸ்

நிறுவனம் எதிர் ஹரியானா மாநில அரசு[(2005) 9 எஸ்.சி.சி. 164], கேகே பால்லா எதிர் மத்தியபிரதேச அரசு[(2006) 3 எஸ்.சி.சி. 581], புல்ஜித்கவுர் எதிர் பஞ்சாப் மாநில அரசு[(2010 11 எஸ்.சி.சி. 455], ச்சாமன் லால் எதிர் பஞ்சாப் மாநில அரசு[(2014) 15 எஸ்.சி.சி. 715]). சமீபத்திய ஒடிசா மாநில அரசு எதிர் அனுப்குமார் சேனாபதி[2019 எஸ்.சி.சி. ஆன்லைன் எஸ்.சி. 1207] என்ற வழக்குகளில் இந்நீதிமன்றம் பின்வருமாறு எடுத்துக்கூறியுள்ளது:

> "ஒரு நீதிபரிபாலன அமைப்பால் ஒரு தவறோ அல்லது தவறான நடைமுறையோ பின்பற்றப்பட்டு அது ஒரு நபருக்கோ அல்லது ஒரு குழுவான நபர்களுக்கோ சாதகமாக அமையும்பட்சத்தில் மற்றவர்கள் அதற்கு உயர்வான நீதிமன்றத்தை அனுகி அதே தவறை மீண்டும் செய்வதற்கு கோர இயலாது. அதன்மூலம் அவ்வாறு செய்யப்பட்ட தவறு மற்றும் தவறான நடைமுறை அதிகரிக்க கோரக்கூடாது. ஒரு தவறான முடிவு அல்லது உத்தரவானது ஒரு குறிப்பிட்ட நபருக்கு வழங்கப்படும்பட்சத்தில் அதன் அடிப்படையில் மற்ற நபர்கள் அதே உத்தரவு மற்றும் பரிகாரங்களை அந்த தவறான தீர்ப்பின் மூலம் கோரமுடியாது."

25. மேற்கூறிய காரணங்களுக்காக பாதிக்கப்பட்ட மேற்முறையீட்டாளர்களும் எதிர்மனுதாரர் விண்ணப்பதாரர்களும் (தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகத்தின் மேல்முறையீட்டு மனுவில்) சமஉரிமை கோர இயலாது என்று இதன்மூலம் தீர்ப்பளிக்கப்படுகிறது. அவர்களது நீதிபேராணை மனுக்களானது சமாதான உத்தரவின்பேரில் அமைப்பெற்றுள்ளது. அது சட்டத்தால் நியாயபடுத்த இயலாதது.

எனவே, 02.08.2018 தேதியிட்ட மெட்ராஸ் உயர் நிதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வால் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவானது தோல்விக்குள்ளாக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அது முறையே தள்ளுபடி செய்யப்படுகிறது. அதே காரணங்களுக்காக தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகம் 29.04.2019 தேதியிட்ட மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் 2016ஆம் ஆண்டு நீதிபேராணை மேல்முறையீட்டு மனு எண்கள்1071, 1072, மற்றும் 2016ஆம் ஆண்டு நீதிபேராணை மேல்முறையீட்டு மனு எண்கள் 8150, 10266, 10267, 17997, 17998, 29113, 29114, 29115, 29116, 33743, 33744, 33745, 39292, 39673, 41609, 41610 ஆகியவற்றில் பிறப்பக்கப்பட்ட உத்தரவின் மீதும் 2017ஆம் ஆண்டின் நீதிபேராணை மனு எண்கள் 13948, 13949, 13950, 13951, 13952, 13953 ஆகியவையும் 2018ஆம் ஆண்டின் நீதிபேராணை மனு எண்கள் 1808, 18576, 18624 ஆகியவற்றிலும் செய்யப்பட்ட மேல்முறையீடானது வெற்றி அளிக்கப்பட்டு அது அனுமதிக்கப்படுகிறது. இவ்வாறான சூழ்நிலையில் வழக்கு செலவு தொகையை பொறுத்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கவில்லை.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான

நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."